# "ஹரிஜனங்களை முன்னேறச் செய்தது நீதிக் கட்சியே"

Phone No 4502 · விலை அரை அணா

Regd. No. M. 5458 · இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. · MALAIMANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (19—6—50) · வெளியூர் (20—6—50) [ இதழ் 282

## பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியிராவிடில் நம் கதி அதோகதிதான்

.....................(:-:)...................

## சாதி வெறியர்களால் நாம்பட்டபாடுகள் கொஞ்சநஞ்சமல்ல

### நாம் அரசியலில் முன்னேறவேண்டும்

### மூன்ருவது ஹரிஜன மாநாட்டில் தோழர் முனுசாமி பிள்ளை பேச்சு

"1097—ம் ஆண்டு முதற்கொண்டே சீர்திருத்தவாதிகள் நம்மினத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுவந்தார்கள் என்று சொல்லப்பட்டபோதிலும், 1916-ம் ஆண்டில் டி. எம். நாயர், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைத் தோற்றுவித்த பின்னரே, அரசாங்கம் நம்முடைய நிலையை உணர ஆரம்பித்து, நமது முன்னேற்றத்துக்கென ஒரு சில காரியங்களைச் செய்ய முன்வந்தது"

இது, அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்ற மூன்ருவது மாகாண ஹரிஜன மாநாட்டில் தலைமை வகித்த, முன்னுள் சென்னை அமைச்சர் தோழர் வி. ஐ. முனிசாமி பிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ள கருத்து. அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி மூலம், ஆட்சி முறையில் பங்கு அளிக்கப்பட வேண்டுமென்று பேசப்பட்ட போதுதான், உயர் ஜாதிக்காரர்களின் ஜாதி வெறியும், ஆணவமும் தாண்டவமாட ஆரம்பித்தது. பின்னர் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் பயனாக, சில நன்மைகள் ஏற்பட்டன" என்று கூறியுள்ளார்.

தோழர் முனிசாமி பிள்ளை ஒரு காங்கிரஸ்காரர். காந்தீயத்தில் நம்பிக்கைவைத்திருப்பவர், அப்படிப்பட்டவர்தான் கூறுகிருர், சொல்லளவிலிருந்த ஹரிஜன முன்னேற்றம், பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியதன் விளைவாக செயலளவுக்கு வந்தது என்று. அதுமட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி உரிமை வேண்டும் என்று பேசப்பட்ட காலத்திலே உயர் சாதிக்காரர்களின் ஆர்ப்பாட்டம் அளவுகடந்துசென்றது என்பதையும் அவர் ஒப்புக்கொள்ளுகிருர். தனது பேச்சிலே 'ஜாதி ஆணவம்' என்ற சொல்லைத் துணிந்து உபயோகப்படுத்துகிருர்.

ஆச்சாரியாரின் உற்ற நண்பர், ஆஸ்திகத்தில், அதன் வழி தோன்றிய வருணாச்சிரம தர்மங்களில் அசைக்க முடியாத பற்று கொண்டிருக்கும் அன்பர் முனுசாமியார் இப்படித் துடுக்குத் தனமாகவும், காங்கிரசுக்கு எதிர் கட்சியாராகிய நீதிக்கட்சியின் பணியினைப் பாராட்டியும் பேசியிருக்கிருர் என்ற ஆச்சர்யம் பலருக்கு எழக்கூடும். ஆம்; அவரேதான் பேசியிருக்கிருர் தெரிந்தோ, தெரியாமலோ உள்ளதை மறைக்காமல் கூறிவிட்டார்.

"பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றிய பிறகுதான், நமது நிலையை அரசாங்கம் உணர ஆரம்பித்தது. நாமும் ஓரளவு பயன்காண முற்பட்டோம்" என்கிருர் அவர். அன்பர் முனுசாமியாரின் இந்தப் பேச்சை, இன்று வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையை எதிர்த்து, வீண் வம்புக்கு நிற்கும் அக்ரகார வாசிகளுக்கும், அவர்தம் அடிவருடிகளுக்கும், அன்பர்களுக்கும் அப்படியே அர்ப்பணம்செய்ய விழைகிருேம்.

நீதிக்கட்சி தோன்றியிராவிட்டால், அதன் வகுப்புவாரி பிரதிநிதித்வ சட்டம் அமுல் நடத்தப்படாதிருந்தால் தாழ்த்தப்பட்டோர் இன்றிருந்ததைவிட ஓரளவேனும் முன்னேறியிருக்க முடியுமா என்பதையும் தாழ்த்தப்பட்ட மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அது மட்டும் போதாது; இந்நாட்டில் சாதித்திமிரும், ஆணவமும் மக்களை எத்தனை துன்பங்களுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் உணர்ந்து, அக்கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்க முயலவேண்டும். தோழர் முனுசாமி பிள்ளை போன்ருர் இங்ஙனம் வெற்றுப் பேச்சுப் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. கொடுமைகளைக் களைய முன்வரவேண்டும். சாதி ஆணவத்தைக் கண்டிக்கும் அதேநேரத்தில், சாதிகள் தோன்றக் காரணமென்ன என்பதையும் சற்று அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் தெரியும், அனைத்துக் கொடுமைகளுக்கும் அடிப்படை இந்து மதம் என்பது தெரியவரும்.

ஆனல், வருந்தத்தக்கவிதத்திலே தோழர் முனுசாமியார் எந்த இந்துமதம் இந்நாட்டுப் பழங்குடி மக்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்தக்காரணமாக இருந்ததோ, அந்த இந்துமதத்துக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசியிருக்கிருர். ஹரிஜனங்கள், இந்துமதத்தைவிட்டு வெளியேறக்காரணமே இல்லை என்கிருர். என்னே விந்தை!

## அய்யப்பன் அழிக்கப்பட்டார்

———(:0:)———

### சபரிமலை கோவிலுக்குக் கொள்ளி வைக்கப்பட்டது

———(...)———

### சிலையை உடைத்து, பொருள்களைக் களவாடிச் சென்றனர்!

கோட்டயம், ஜுன் 17—

திருவாங்கூருக்கு வடகிழக்கில் உள்ள சபரிமலைக் குன்றின் மீதுள்ள ஐயப்பன் கோவிலில், சில கொள்ளைக்காரர்கள் புகுந்து, சிலையை உடைத்துப் பொருள்களைக் களவாடி, கோவிலுக்குத் தீ வைத்துவிட்டு ஓடிவிட்டனர் என்று சொல்லப்படுகிறது.

சபரிமலை கோட்டயத்துக்கு 75 மைல் தொலைவிலுள்ளது. இங்குள்ள கோவில் மிகப் பழமையானதென்றும் ஆண்டுதோறும் இங்கு பக்தர்கள் வந்துபோவார்களென்றும் சொல்லப்படுகிறது. வருடாந்திர திருவிழாவுக்குப் பிறகு, கோயில் குருக்கள்மாரும் ஆதினகர்த்தர்களும் தவிர, வேறுயாரும் அக்கோவிலைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லையாம்.

கோவிலில் களவு நடந்த செய்தியை, குருக்கள்மார் மேலதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிருர்களாம்

## "ஆரியமாயை" வழக்கு

திருச்சி, ஜுன் 16—

இன்று நடைபெற்ற 'ஆரியமாயை' வழக்கு, 29—6—50 தேதிக்கு, மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

## தென் ரொடிஷியாவில் நிலப்பிரிவினை

சாலிஸ்பரி, ஜுன் 18—

தென் ரொடிஷியாவில் வெள்ளையர்களுக்கும், சுதேசிகளுக்கும் நிலங்களைப் பிரித்துக்கொடுக்கும் மசோதா இப்பொழுது பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இம்மசோதாவின்படி ஐரோப்பியர்களுக்கு 48358290 ஏகராவும், சுதேசிகளுக்கு 843826 ஏக்கர்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆப்பிரிக்கர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் போதாது என்று கூறுகின்றனர். ஆனல் வெள்ளையர்கள் மேற்கொண்டு நிலம் சுதேசிகளுக்குக் கொடுக்கக்கூடாதென்று கூறுகின்றனர்.

## 16000 பேர் வேலை இழந்தனர்

———(0)———

### பீகார் கிராமப் போலீஸ் படையில் ஆள் குறைப்பு

பாட்னு, ஜுன் 18—

பீகார் சர்க்கார், தங்கள் கிராமப் போலீஸ் படையை 30 சதவிகிதம் குறைத்துவிட்டதாக, உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது. இதனல், மொத்தம் உள்ள 54,000 சௌகிதார்களில் 16 000 பேர்களுக்கு வேலை போய்விட்டது.

பீகார் கிராம போலீஸ் சீர்திருத்தக் கமிட்டி, 50 சதவிகித ஆள் குறைப்புக்கு சிபார்சு செய்திருக்கிறது.

இதுவரை ஒரு சௌகிதாருக்கு மாதச் சம்பளம் ரூ. 4 கொடுக்கப்பட்டு வந்ததாம், இனிசம்பளம் ரூ. 10-ம், பஞ்சப்படி ரூ. 2-ம் ஆகமொத்தம் ரூ. 12 கொடுக்கப்படுமாம்.

—குளோப்

## இஸ்ரேலை இந்தியா அங்கீகரித்தல்

### இந்தியத்தூதுவர் விளக்கம்

பீரட், ஜுன் 18—

"மத்திய கிழக்கில் அமைதியும், நிரந்தர சமாதானமும் நீடிக்க வேண்டுமென்பதே இந்தியக் கொள்கையின் அடிப்படை, இஸ்ரேலை அங்கீகரிப்பதின் மூலம், அரபுநாடுகளுடன் உள்ள உறவு ஒரு நாளும் பாதிக்கப்படமாட்டாது" என்று லெவாண்டிலுள்ள இந்திய ஸ்தானிகர் ஆஸப் அலி அஸ்கார் டைஜி, இங்கு பேசுகையில் கூறினர்.

இந்தியாவுக்கும், லெபனுனுக்குமிடையே கலாசார, பொருளாதார உறவுகளை பலப்படுத்துவதற்காக லெபனீஸ் சர்க்காருடன், தான சீக்கிரமே பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக அவர் தெரிவித்தார்.

## அணுகுண்டு தாக்குதல் விளைவுகளிலிருந்து தப்ப முயற்சி

———(0)———

### 25000 ஸிவில் பாதுகாப்பு ஊழியர்களுக்கு பிரிட்டன் பயிற்சிதரும்

### காமன் வெல்த் சர்வகலாசாலை மாநாடு

இவ்வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் காமன்வெல்த் சர்வகலாசாலைகள் மாநாடு நியூஜிலாந்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கு இந்திய பிரதிநிதியாக தோழர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியாரும், பனாரஸ் ஹிந்து காலேஜ் ப்ரொபசர் தோழர் சந்திரசேகர பிள்ளையும் செல்லுவார்கள்.

இவர்களிருவரும் சிட்னி, மெல்போர்ன், அடிலெய்ட் சர்வகலாசாலைகளுக்கு விஜயம் செய்வர். நியூஜிலாந்து செல்லுமுன் இவர்கள் 10 நாட்கள் ஆஸ்திரேலியாவில் தங்குவர்.

—குளோப்

லண்டன், ஜுன் 18—

அணுகுண்டு தாக்குதல்களால் ஏற்படும் விளைவுகளிலிருந்து பாதுகாப்புவழிகளைக் குறித்து 25,000 சிவில் பாதுகாப்புஊழியர்களுக்குப்பயிற்சி அளிக்க பிரிட்டன் திட்டம் போட்டிருக்கிறது. இவ்விஷயமாக ஹிரோஷிமாவில் ஏற்பட்ட அனுபவங்களை [illegible]தில் கொண்டு, இப்பாதுகா[illegible] முறைகள் தயாரிக்கப்பட்டி[illegible]கின்றன.

சிவில் பாதுகாப்பு [illegible]டர் ஸர் ஜான் ஹாட்ஜ், இம்முறைகள் மூலம் உயிர்ச்சாவை வெகுவாகக் குறைக்கலாம் என்று கூறுகிருர்.

# மாலை மணி

சென்னை 19-6-50 திங்கட்கிழமை


# ஆரணி மாநாடு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட மாநாடுகள் வரிசையிலே, ஆறாவது மாநாடு ஆரணியில் நடைபெறப் போகிறது.

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மாநாடு கூடுகின்றனர். ஆரணியில், இத்திங்கள் 24, 25-ம் நாட்களில்!

ஆரணிக் கோட்டையில், திராவிட முன்னேற்றக் கழகப் பாசறை அமைகிறது—வீரர்கள் கூடுகின்றனர்—விவேகிகள் திரளுகின்றனர்!

நாட்டின் நிலையை ஆராய்ந்தறியவும், நாட்டைப் பிடித்திருக்கும் நெருக்கடிகளைப் போக்கும் நேரிய வழிகளைக் காணவும், இன்பத் திராவிடத்தைச் சித்தரிக்கத் திட்டம் பல தீட்டவும் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தோர் மாநாடு கூட்டுகின்றனர். வெள்ளையுள்ளமும், விவேக சிந்தையும் படைத்த வீரர்கள் கூடும் மாநாடு சீரும், சிறப்பும் பெற்றுப் பொலிவுடன் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தின் பல பகுதிகளிலும், சிற்றூர், பேரூர், சிறுநகர், பெருநகர் ஆகிய எல்லா இடங்களிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் தழைத்தோங்கிச் செழித்து வளர்ந்திருக்கின்றன. நீதியும், நேர்மையும், உண்மையும், உழைப்பும், பண்பும், பற்றுள்ளமும், கொள்கையும், கோட்பாடும், திட்டமும், தீரமும், ஜனநாயக முறையும், சமத்துவ நோக்கமும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடையே மட்டுமே பொலிந்து விளங்குவதைக் கண்ட தோழர்கள், அதற்குப் பெருவாரியான ஆதரவையும், அன்பையும் கொடுத்து வருகின்றனர். ஆதரவாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. இதுவரை நாட்டவர்கள் பெருவழக்காய் கேள்விப்படாத சிற்றூர்களிலெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் பரவி வருகிறது என்றால், அதன் தேவையை எந்த அளவுக்கு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

மக்களின் இன்ப வாழ்வுக்கான கருத்துக்களைப் பகுத்தறிவின் அடிப்படையில் நின்று, எடுத்துக் கூறி வரும் தன்மை, திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் திறம்பட திகழ்வதைக் கண்ட மக்கள், எங்கு இதன் சார்பாகக் கூட்டங் கூட்டினாலும் அங்கு பெருவாரியாகச் ...சல்கின்றனர்; கருத்துக்களைச் ...விமடுக்கின்றனர்; சிந்தை ...ளிக்கின்றனர்; சீர்தூக்கிப் ...க்கின்றனர்: சீரிய வாழ்வு ...த்த முற்படுகின்றனர். ...வட்டந்தோறும் இதுவரை ...யில் நடந்த மாநாடுகளே, அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. ஒரு கட்சிக்கு இருக்கவேண்டிய அளவுக்குப் பண பலம், பத்திரிகை பலம், படைபலம், பாராளுமன்றத்தினர் பலம், பதவியிலிருப்போர் பலம், படித்த கூட்டத்தாரின் பெருவாரியான பலம் ஆகியவைகள் இல்லாத காரணத்தால், கழகக் கருத்துக்கள் பரவுவது மெதுவாக நடைபெறுகிறதேயல்லாமல், கருத்துக்கள் குற்றமுடையன, குறைவாய்ந்தன என்று எவராலும் கூறமுடியாது—முடிந்ததில்லை.

பண அரசு—படை அரசு—பக்தி அரசு ஆகிய அரசுகளையெல்லாம் வேரோடு வீழ்த்தி விட்டு, பண்பு அரசு—குடி அரசு—அறிவு அரசு ஆகியவைகளையே ஏற்படுத்தக் கழகம் திட்டம் தீட்டிவருவதால் இதில் பாட்டாளி மக்களும், தொழிலாளர்களும், ஏழை மக்களுமே பங்குகொண்டுள்ளார்கள். தலைமைக் கழகத்திற்குக் கட்டிடம் வாங்குவதற்கான நிதி சேர்ப்பதென்றாலும், நான்கணா, எட்டணா வீதம்தான் சேர்க்கமுடிகிறது — அப்படிப்பட்ட சிறு துளிகளைக்கொண்டுதான், பெரு வெள்ளத்தை உண்டாக்கவேண்டியிருக்கிறது. வற்புறுத்தலுக்கு அஞ்சியோ, கட்டளைக்கு அடிமைப்பட்டோ அல்லாமல், அன்புடனே ஆதரவாளர்கள் சிறு தொகையானாலும், அதனைக் கொடுக்கமுன்வருவதால்தான், கழகம் நாளுக்குநாள் வலுப்பெற்று வளருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தார் கொண்டிருக்கும் கொள்கையிலே உள்ள உண்மைத் தன்மைதான், கழகத்திற்கு உயிரும் உடலுமாய் இருந்து வருகிறது.

கொள்கை காற்றில் பறக்க விடப்பட்டு, இயக்கம் சதிக்குள்ளாக்கப்பட்டு, நிதி சொந்தமாக்கப்பட்டு, தொண்டர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு, உண்மை உழைப்பாளர்கள் உதாசீனம் செய்யப்பட்டு, இயக்கத்தார் அனைவரும் அவமானத்திற்குள்ளாக்கப் பட்ட நேரத்தில் தான், கொள்கைக்காகவே இயக்கத்தில் இருந்து பலகாலம் உழைத்து வந்த உண்மைப் பற்றுள்ளங்கொண்டோர், இதுவரையில் உலகில் யாரும் நடந்து காட்டாத முறையில் கண்ணியமாகவெளியேறி, நேர்மை நோக்கோடு புதிய கழகம் கண்டனர். அதுதான், திராவிட முன்னேற்றக் கழகமாக மலர்ச்சிபெற்றது. அதன் வளர்ச்சியைக் கண்டு பொறுமைப்பட்டு, நாளும் நாளும் செத்துக்கொண்டே இருக்கும் குறைமதியினரும் இனமும் நாட்டில் இல்லாமலில்லை. அவர்கள் மிகச் சிறிய தொகையினர்—சுயநலத்தின் காரணமாகப் பிதற்றித் திரிகின்றனர். இல்லாததையும் பொல்லாததையும் கூறி, பொது மக்களை ஏமாற்றி, பொதுவாழ்க்கையின் பலனைச் சொந்த வாழ்வாக மாற்றிக்கொள்ளும் சுயநலங்கொண்டோர், பொது வாழ்வில் நீண்ட நாட்கள் உலவ முடியாது என்பதை, நாடு நன்கறிந்துகொண்டு விட்டது. அத்தகைய விழிப்புணர்ச்சியின் விளைவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம்.

அத்தகைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிவு வட ஆற்காடு மாவட்டத்தில் எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் கலங்கரை விளக்கமே ஆரணியில் கூடும் மாநாடாகும். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள கழகத் தோழர்களும், கழக ஆதரவாளர்களும் மாநாட்டில் பெருவாரியினராகக் கலந்து, கடமையை ஆற்றிக் களிப்படைவார்கள் என்றே கருதுகிறோம்.

பள்ளிப்பருவகாலத்திலிருந்தே பகுத்தறிவுக் கொள்கையினிடத்துப் பற்றுகொண்டு, அக்கொள்கையைவாய்ப்புகிடைக்கும் இடங்களிலெல்லாம் நிலைநிறுத்தப் பாடுபட்டு வருபவரும், எத்தகைய எதிர்ப்புகள் எங்கிருந்து எப்படி வந்தாலும், அவற்றை எதிர்த்து நின்று வெற்றிகொள்ளும் திறத்தினரும், சொல்லின் செல்வரும், செந்தமிழ்நாட்டு மாறா ஆர்வமுடையவரும், விடாமுயற்சி கொண்டவரும், செயலாற்றும் பண்புபடைத்தவரும், இளைஞர் தலைவருமான தோழர் க. அன்பழகன் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமைதாங்க தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது போற்றிப் புகழத்தக்கதொன்றாகும்.

மாநாட்டின் துவக்குபவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்கள், கொள்கைப்பற்றும், தொண்டாற்றும், சிறப்பும், சொற்பொழிவாற்றும் திறனும் பாட்டுப்பாடும் பண்பும் கொண்ட சீரிய நல்லிளைஞர் ஆவார்.

மற்றும் பொதுச்செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள் என்றால், அதன் சிறப்பைத் தனியே எடுத்து விளக்க வேண்டிய அவசியமேயில்லை.

வரவேற்புக் கழகத் தலைவராக இருக்கும் ஆரணித் தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் நேர்மைப் பண்பும், பொதுநலநோக்கமும், உழைக்கும் திறமும், உண்மை நெறியும், வெள்ளையுள்ளமும், கொண்ட பெருந்தகையாவார். அவரோடு தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், திருவத்திபுரம் கோவிந்தன், ஆரணித்தோழர்கள் ஆகியோர் துணையாயிருந்து அரும்பாடுபட்டு வருகின்றனர்.

மாநாட்டில் முதல் நாள் இரவு சென்னை முன்னேற்ற நடிகர் கழகத்தாரால் நடிக்கப்பெறும் 'வழக்கு வாபஸ்'—'கல்சுமந்த கசடர்' ஆகியஓரங்கநாடகங்களும் தோழர்கள் கே. ஆர். இராமசாமி, சி. என். ஏ. முதலியோரால் நடிக்கப்பெறும் "சந்திரமோகன்" நாடகமும் மாநாட்டிற்குத் தனிச் சிறப்பை அளிப்பனவாகவும்—கண்ணுக்கும், காதுக்கும், கருத்துக்கும் சிறந்த விருந்து அளிப்பனவாகும்.

**ஆரணி மாநாடு** எல்லாவகையிலும் சீரும், சிறப்பும்பெற்று, வெற்றிகொண்டு வீறுடன் விளங்கும் என்பதில் ஐயமில்லை. அதற்கானமுறையில், அன்பர்கள் அனைவரும் ஆதரவு நல்குவார்களாக.

**ஆரணி மாநாடு வெல்க!**

# தொழிற் கட்சி மெஜாரிட்டி இவ்வாரம் ஐந்தாகிவிட்டது

............(—)............

## இரு உறுப்பினர்களுக்கு ஜுரம்!

லண்டன், ஜூன் 18—

எங்கு சபையில் இல்லாவிடில் கட்சி மெஜாரிட்டி குறைந்துவிடுமோ என்ற காரணத்தினால், இரவுபூராவும் சபையில் இருந்தது காரணமாக இரு மெம்பர்களுக்கு அசௌக்யம் ஏற்பட்டுவிட்டது. இவ்வாரம், இதனால் தொழிற்கட்சி மெஜாரிட்டி 5 ஆகக் குறைந்துவிட்டது. அடுத்த வாரம் இவ்விருவரும் குணமடைந்துவிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(குளோப்)

## பருத்தி கம்பளத்திற்கு மாற்றுப்பொருள்கள்

லண்டன், ஜூன் 18—

பருத்தி, கம்பளம் இவைகளின் விலை மிகவும் அதிகரித்து வருவதால் இவைகளுக்குப் பதிலாக உபயோகிக்கும் பொருள்களை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்க முனைந்து வருகின்றனர்.

பிரிட்டனிலும், அமெரிக்காவிலும் இது சம்பந்தமாக செய்யப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற்றிருக்கின்றனவாம்.

'ஆலான்' என்ற நூதன நூல் துணி அல்ட்ராவயலெட் கிரணங்களைத் தடுக்கக்கூடியதாம். இவை உடைகளுக்காக இனி அதிகமாகப் பயன்படுத்தப்படலாம்.

'ஓர்லான்' என்ற நூல் துணியை, ஸ்விஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இன்னும் 6 மாதத்தில் இதன் உற்பத்தி பெருகிவிடலாம்.

ஆர்டில், டெக்லன் என்ற இரு புதிய நூல்துணிகள், பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளால் பருத்தியும், கம்பளமும் அடியோடு ஒதுக்கப்பட்டுவிடாது என்றாலும், இவைகளால் ஓரளவு பருத்தியும் கம்பளமும் பாதிக்கப்படும் என்பது கவனிக்க வேண்டிய விஷயமே. —குளோப்

## அணிவகுப்பின்போது மூர்ச்சை அடைந்தான்

லண்டன், ஜூன் 18—

பிரிட்டிஷ் மன்னர் பிறந்த தினத்தின்போது நடைபெற்ற ராணுவ அணிவகுப்பின்போது, ஒரு ஸோல்ஜருக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது. தான் பிரக்ஞை இழக்கும் நிலையிலிருப்பதை அவர் தன் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தெரிவித்தார். அவர்கள் அவரை மெதுவாகப் பிடித்துக்கொண்டு 100 கஜ தூரம் சென்றனர். இதனால் 'பரேட்' தடைபடவில்லை.

## டெலிவிஷன் மூலம் ரேஸ் ஆடலாம்

லண்டன், ஜூன் 18—

பிரிட்டனில்வீட்டிலிருந்தபடியே டெலிவிஷன் மூலம், ரேஸ் ஆடும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இவர்கள் டெலிவிஷனில் பார்த்துக்கொண்டே, டெலிபோன் மூலம் தங்களுக்கிஷ்டமான குதிரைகள் மீது பணம் கட்டி வருகிறார்களாம்.

## இடி மழைகளுக்கிடையேயும் விமானம் ஓட்டலாம்

லண்டன், ஜூன் 18—

இடி, மழையிருந்தபோதும் 1863 அடி உயரத்தில் விமானத்தை ஓட்டி அமெரிக்க விமானிகள் பரீட்சை நடத்தியிருக்கின்றனர். இதன் மூலம் அத்தகைய நிலைமையில் எப்படி விமானத்தை ஓட்டுவது என்ற ரகசியத்தை அவர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். இம் முறை பிரிட்டிஷ் விமானிகளுக்கும் கற்றுக் கொடுக்கப்படும்.

## பாவ்டேயை கொல்ல சதி

லண்டன், ஜூன் 18—

பாவ்டேயைக் கொல்ல கம்யூனிஸ்டுகள் போட்ட சதித்திட்டம் சம்பந்தமாகவே ஒஹரீனில் இரு பிரெஞ்சு விமானங்கள் விபத்திற்குள்ளாகியிருக்கவேண்டும் என்று பாரீஸில் நம்பப்படுகிறது.

48 மணி நேரத்திற்குள், ஒஹரீன் அருகில் ஏற்பட்ட இரு பிரெஞ்சு விமான விபத்துகளில் 85 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

பாவ்டே பாரிஸ் செல்ல இரகசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது எப்படியோ வெளியாகி, கம்யூனிஸ்டுகள் இச்சதித் திட்டத்தைப்போட்டிருக்கின்றனர், என்று கருதப்படுகிறது.

கராச்சியிலிருந்து விமானங்கள் புறப்படும்போது, நல்ல நிலைமையிலேயேஇருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், விமானத்திலுள்ள சில முக்கியமான கம்பிகள் மீது திராவகம் பூசப்பட்டிருக்கலாம் என்றும், அது பலன் அளிக்க நேரம் பிடித்திருக்கலாம் என்றும், அதனால் விமான விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

## விமானம் நொறுங்கியது

### காப்டன் உட்பட இருவர் மாண்டனர்

மசூலிப்பட்டிணம் ஜூன் 18—

இன்று அதிகாலை ஒருமணி பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் இந்நகருக்கருகிலுள்ள பாம்தோப் என்னுமிடத்தில் ஏர் இந்தியா விமானமொன்று தரையில் மோதியது.

விமானத்தின் காப்டன் உட்பட இருவர் ஸ்தலத்திலேயே மாண்டனர் என்று கூறப்படுகிறது.

விமானத்தின் ரேடியோ ஆப்ரேட்டர் உட்பட பலர் காயமுண்டனர்.

இவ் விமானம் பம்பாயிலிருந்து ஹைதராபாதிற்குச் சென்று கொண்டிருந்தது.

இவ் விபத்திற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. விமானம் சுக்கல் சுக்கலாக நொறுங்கிவிட்டது.

காயமுண்டவர்கள் அனைவரும் சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

## இனி நடப்பவை

மதுரை:— வடக்கு வட்டார நவக்கர் புதுத்தெருவில் உள்ள தி. மு. க. இளைஞர்களின் கூட்டம், வடக்குமாசி வீதியில், தோழர் அப்பாச்சாமி இல்லத்தில், 20-6-50 காலை 9-மணிக்கு நடைபெறும். நவமணி நாயக்கர் புதுத்தெருவில் ஒரு கிளைக்கழகம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்படும். தி. மு. க. வில் பற்றுள்ள இளைஞர்கள் யாவரும் தவறாது வரவேண்டுமாய் அமைப்பாளர் தோழர் அ. வீராசாமி எழுதியுள்ளார்.

# மாயவரத்தில் பொதுச்செயலாளர்

## மக்களிடையேமட்டிலார்வபுத்துணர்ச்சி

### நகரெங்கும் குதூகலம்

### வெள்ளம்போல் மக்கள் திரண்ட காட்சி

மாயவரம், ஜூன் 16—

மாயவரம் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், நகராட் பூங்காவில் இன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார்.

கூட்டம் நடைபெறும் மைதானத்தில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, கழகக் கொடிகள் ஆங்காங்கு பறந்துகொண்டிருந்தன. பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களின் பேச்சைக் கேட்க, சுற்றுபுறங்களிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் மாலை 5-மணியிலிருந்தே கும்பல் கும்பலாகக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்துகொண்டிருந்தனர். பொதுச்செயலாளர் அவர்களின் மாயவரம் வருகையைப்பற்றி நகர மக்கள் மிக உற்சாகமாக இருந்தனர் என்பதற்கறிகுறியாக, ஆங்காங்கு கும்பல்கூடுவதும் கூட்டத்தின் ஏற்பாடுகளைப்பற்றி பேசுவதுமாகவே இருந்தனர். சுருங்கக்கூறுமிடத்து, மாயவரமே பெரும் திருவிழா வைபவமாகவே இருந்ததென்று கூறலாம். சுமார் மாலை 6-மணிக்கு தோழர் அண்ணாதுரை அவர்களும், தோழர்கள் கே. கே. நீலமேகம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத் முதலியவர்கள் காரில்வந்து இறங்கினர். மக்கள் அவர்களைக் கண்டதும், சந்தோஷ ஆரவாரமிட்டு "அண்ணா வாழ்க" "திராவிடநாடு திராவிடருக்கே" என்று கூறி வரவேற்றனர். தோழர் பழனிசாமி நாடார், தோழியர் ராமாமிர்தம்மாள் உட்பட நகர முக்கியஸ்தர்கள் தலைவர்களை வரவேற்று மேடைக்கழைத்துச் சென்றனர்.

கூட்டம் 6-மணிக்கு ஆரம்பிக்க வேண்டியிருந்தும் மின்சார இணைப்பு அனுமதி கிடைக்காததால், கூட்டம் ஆரம்பிப்பதில் சிறிது காமதம் ஏற்பட்டது. இரவு 7-மணியாகியும் ஒலிபெருக்கி வேலை செய்ய முடியாத அளவுக்கு வந்தும், அண்ணாதுரை அவர்கள் கூட்டத்தை ஒலிபெருக்கி இல்லாமலே நடத்தும்படி நகர முக்கியஸ்தர்களுக்கு கூறியதற்கிணங்க, கூட்டம் பெருங் கைதட்டுதலுக்கிடையே ஆரம்பிக்கப்பட்டு, தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமைப் பேச்சு ஆரம்பமாயிற்று. தலைவர் சுமார் 30 நிமிஷம் பேசிய பிறகு, தோழர் ஈ. வி. கே. சம்பத்தும், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியவர்கள் பேசிய பிறகு, தோழர் அண்ணாதுரை அவர்கள் பெருங் கைதட்டுதலுக்கிடையே எழுந்து பேச ஆரம்பித்து சுமார் 2-மணி நேரம் பேசினார் (முழு விவரம் பின்னர் வரும்) இரவு 9-30 மணிக்கு கூட்டம் நன்றி கூறுதலுடன் முடிவு பெற்றது.

இரவு தோழர் பழனிசாமி நாடார் இல்லத்தில், தோழர் அண்ணாதுரை அவர்களுக்கும், மற்ற தலைவர்களுக்கும் விருந்து நடைபெற்றது. அன்று இரவு 11-மணிக்கு மாயவரத்தை விட்டு தோழர் அண்ணாதுரை அவர்களும் மற்றவர்களும் கார்மூலம் புறப்பட்டு கும்பகோணம் சென்றனர்.

## மேனனுக்கேவில் யோகாப்பியாசம்!

லண்டன், ஜூன் 18—

அநேக நூற்றுண்டுகளாக இந்தியாவிலேயே அப்பியாசம் செய்யப்பட்டு வந்த யோகாப்பியாசம் இப்பொழுது மேனனுக்கேவில் லண்டனிலேயே வேகமாகப் பரவி வருகிறது. தேகவலிமையும் புத்தி கூர்மையும் பெற யோகம் நல்ல சாதனம் என்பதை அவர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

பிரபல யோகாசன நிபுணர் ஸர் ஜான் டியூக்ஸ் என்பவர் செய்து காட்டிய பயிற்சிகள் டெலிவிஷன் செய்து காட்டப்பட்டதால் ஆயிரக்கணக்கான பேர்கள் அவைகளைக் கண்டு களித்தனர்.

இப்பொழுது லண்டனில் முதல் தரப்பத்திரிகை ஒன்று தினசரி யோகாப்பியாசத்தைப்பற்றி ஒரு கட்டுரையைப் பிரசுரிக்க ஆரம்பித்திருக்கிறது. ஸர் பால் டியூக்ஸ் தான் இக் கட்டுரைகளை எழுத ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## கிருஷ்ணமேனன் டப்ளின் செல்கிறார்

லண்டன், ஜூன் 18—

இந்திய ஹைகமிஷனர் தோழர் கிருஷ்ணமேனன் இன்று டப்ளினுக்கு விமானமூலம் செல்கிறார். அயரின் இந்திய ஸ்தானிகர் அந்நாட்டுப் பத்திரத்தை அவர் பிரசிடெண்டிடம் செவ்வாய் கிழமை அவர் சமர்ப்பிப்பார்.

அவர் செவ்வாயன்று அயர் அயர்லாண்டுக்கு மந்திரி தோழர் மக்ப்ரைடுடன் விருந்துண்டுவிட்டு அன்றே லண்டன் திரும்புவார்.

### ஸ்காட்-மேனன் சந்திப்பு

தென்னாப்பிரிக்கா சர்க்காரின் நிறத்திமிரைக் கண்டித்துப் பிரசாரம் செய்துவரும் மைக்கேல் ஸ்காட் பாதிரியார் நேற்று தோழர் கிருஷ்ணமேனனை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

## இந்தியாவுக்கு எகிப்து கச்சா பருத்தி

புதுடில்லி, ஜூன் 18—

இவ்வருஷம் பிப்ரவரியுடன் முடிந்த 6 மாதத்தில் இந்தியா 335000 பேல் கச்சா பருத்தியை இறக்குமதி செய்திருக்கிறது. இதில் 183000 பேல் எகிப்திலிருந்தும் 118000 பேல் கிழக்காப்பிரிக்காவிலிருந்தும் மேற்கு பாகிஸ்தானிலிருந்து 12000 பேல்களும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

இதே 6 மாதகாலத்தில் 189000 பேல் பருத்தியை இந்தியா, பெல்ஜியம், அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது.

1949 50-ல் இந்தியாவின் கச்சா பருத்தி உற்பத்தி 2055000 பேல் ஆகும்.

## "நானே கண்டுபிடித்தேன்"

### பறக்கும் தட்டு பற்றி வெல்ஸ்வாசி கூறும் விவரம்

கார்டிப், ஜூன் 18—

'பறக்கும் தட்டு' பற்றிய செய்திகள் வர ஆரம்பித்ததிலிருந்து, அதை முதன் முதலில் கண்டுபிடித்தவர் தாங்களே என்று பலர் இதுவரை கூறியிருக்கின்றனர்.

இப்பொழுது ஒரு வெல்ஸ் வாசி, தானே அதைக் கண்டுபிடித்தவர் என்று கூறுகிறார்.

இவர் 1938 முதற்கொண்டே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததாகவும், விமானங்களைத் தடுக்க பலூன் அரண் அமைப்பதுபோல பறக்கும் தட்டு ஒரு தடுப்பு சாதனத்திற்காகவே கண்டுபிடிக்கப்பட்டதென்றும் இவர் கூறுகிறார்.

## கூந்தலழகிகள்

இச்சதேசியவில் பெண் பாலர்கள் மிகவும் அழகுவாய்ந்தவர்களாம். இவர்கள் ராணிகள் மாதிரி இருந்துகொண்டு ஆண்களையும் வேலை வாங்குகிறார்களாம். இவர்களின் கூந்தலை சீவி முடிக்கும் வேலை இதுவர்களைச் சேர்ந்ததாம்.

ஒரு பெண்ணின் கூந்தலை வாரி முடிக்க பல மணிநேரம் பிடிக்குமாம்.

## புது வரிகள் மூலம் ரூ. 4 கோடி மேல் வருமானம்

பாட்னா, ஜூன், 18—

ஐந்து புது வரிகள் மூலம், சென்ற வருஷம் பீகாருக்கு ரூபாய் 43,5,70,000 வருமானம் கிடைத்திருக்கிறது, இந்த வரிகள் விற்பனை வரி, தமாஷாவரி, விவசாயவருமான வரி, மின்சாரவரி, மோட்டார் ஸ்பிரிட் வரி.

## இமாலய மலை மீது ஏறும் குழுவினர்.

லண்டன், ஜூன், 18—

ஹிமாலய மலை மீது எதிர்வியாதிகளை ஒழிக்கக்கூடிய அபூர்வ மூலிகைகளைத் தேட எரிக் ஸ்மைசல என்பவர் திட்டமிட்டு தன் கோஷ்டியுடன் போகவர் வந்து சேர்ந்திருக்கிறார்.

இவருடைய குமாரியும் பி.பி.ஸி.யில் வேலை செய்பவருமான மிஸ் ஹீதர் ஸ்மைசல் இக்கோஷ்டியுடன் கலந்துகொள்ள வருகிறார்.

—ஜனோப்

புதுடில்லி, ஜூன் 18—

ஆர்ஜெண்டினாவிலுள்ள இந்திய ஸ்தானிகர், தோழர் வெலாகர் தன் பதவி காலம் முடிந்து இந்தியா வந்து சேருவார் என்று தெரிகிறது.

## தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| முன்வரவு | | 3092—14—6 |
| ஒய். என். பழனியாண்டி, 7-வது வட்டம் | சென்னை | 2—0—0 |
| எம். அலெக்ஸாண்டர்சாமுவேல், | ,, | 2—0—0 |
| நாராயணன், | ,, | 2—0—0 |
| மு. ரா. முத்து, | ,, | 2—0—0 |
| கோவிந்தாஸ், | ,, | 1—0—0 |
| ஐயாவு, | ,, | 1—0—0 |
| மு. க. அரசு, | ,, | 1—0—0 |
| க. தேவன், | ,, | 1—0—0 |
| வியாசலன், | ,, | 0—8—0 |
| காணுகரன், | ,, | 0—8—0 |
| ஜி. மாரிமுத்து, | ,, | 0—8—0 |
| ராஜாராம், சங்காரம், | ,, | 0—8—0 |
| பா. கருணாகரன், ர. அந்தோனி, | ,, | 0—8—0 |
| தயாளன், | ,, | 0—8—0 |
| பி. தனம்-சுசிலா (நடன மங்கையர்) | கோவை | 2—0—0 |
| | | 3109—14—6 |

## கள்ளக் கஞ்சா கடத்தல்

### தாய்லாந்தில் அதிகரிப்பு

பாங்காக், ஜூன் 18—

தாய்லாந்தில், நாளுக்குநாள் கள்ளக் கஞ்சா கடத்தும் வேலை மிகவும் அதிகரித்துவருகிறது. ஏராளமாக கள்ளக் கஞ்சா கைப்பற்றப்படுகிறதே யொழிய, கைது செய்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே இருந்து வருகிறது.

அதிகாரத்திலுள்ளவர்கள் எவரோ இதற்கு உள்கையாக இருந்து வரவேண்டும் என்று, சர்க்காரை குறைகூறுபவர்கள் கருதுகிறார்கள்.

இதுவிஷயமாக சர்க்காரைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை பார்லிமெண்டில் எதிர்கட்சியினர் கொண்டுவர, எதிர்கட்சியினர் முன்வந்தனர். ஆனால், இதில் சர்க்கார் தோல்வியடைந்து, மந்திரிசபை கவிழும் நிலைமை ஏற்படுவதைத் தடுக்க இத்தீர்மானம் வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

## மலேயாவில் ஹெலிகாப்டர்கள் உபயோகிக்கப்படும்

குலாலம்பூர், ஜூன் 18—

மலேயா காடுகளில், கொள்ளை கூட்டத்தினருடன் போரிட்டு, காயமடைந்து உதவியின்றி கிடப்பவர்களை எடுத்துவர, ஹெலிகாப்டர்கள் உபயோகிக்கப்படும் எனத்தெரிகிறது.

## மாகாண பீடித்தொழிலாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

சென்னை மாகாணத்தில், ஆங்காங்கு வேலை செய்யும் பீடித்தொழிலாளர்களின் நிலைமை மிக மிக மோசமானதாகவே இருந்து வருகிறது. அவர்களுக்கு வாழ்க்கையை ஓரளவு கண்ணியமான முறையில் நடத்திச்செல்லக்கூடிய அளவில் கூலி கிடைப்பதில்லை. பாதுகாப்பற்ற நிலையில் பீடித்தொழிலாளர் நடைப்பிணங்களாய் வாழுகின்றனர். பீடித்தொழிலாளர்களின் குழந்தைகளோ கல்வியில் மிகத் தாழ்ந்த நிலையில்தான் இருந்து வருகின்றனர், எனவே பீடித்தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெற ஆங்காங்கு சங்கங்கள் அமைக்கவேண்டுகிறேன். சங்கம் அமைக்க விரும்புவோர் எனக்குக் கடிதம் எழுதினால், ஆவன செய்ய வேண்டுமென்று பீடித்தொழிலாளர் சங்கத்தலைவர் தோழர் பி. என் இராமானுசம் வேண்டிக் கொள்கிறார்.

## அடுத்த ஒலிம்பிக்கில் ரஷ்யா பங்கு கொள்ளுமா?

லண்டன், ஜூன் 18—

1952-ல் பின்லாந்தில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் பந்தயங்களில், ரஷ்யா பங்கெடுத்துக் கொள்ளுமா என்பது தெரியவில்லை இதுவரை சர்வ தேச ஒலிம்பிக் கமிட்டி அனுப்பியமூன்று அழைப்புகளை, மாஸ்கோ புறக்கணித்துவிட்டது. இதற்குமுன் ஒலிம்பிக்பந்தயங்களில் கலந்துகொள்ளச் சென்ற ரஷ்ய விளையாட்டு நிபுணர்கள் திரும்பிவராமல் வேறுநாடுகளில் தஞ்சமடைகின்றனராம்.

## வேண்டுகோள்

மதுரை மாவட்ட முதலாவது திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகள் முடிக்க வேண்டியிருப்பதால், மாநாட்டு டிக்கட்டுகள் பெற்றுச்சென்ற தோழர்கள், இதுவரை கணக்குக்கொடுக்காமல் இருப்பவர்கள் யாவரும் தயவுசெய்து இரு தினங்களில் விற்பனையான டிக்கட்டுகளுக்குரிய தொகையையும், விற்பனையாகாத டிக்கட்டுகளையும் விரைவில் அனுப்பி உதவவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன் எனச் செயலாளர் ... முத்து எழுதுகிறார்.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

### 20 - 6 - 50

முத்துப்பேட்டை:—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

### 21 - 6 - 50

பட்டுக்கோட்டை:—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

### 22 - 6 - 50

தஞ்சை:—சி. என். அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

தாராபுரம் தொகுதியில்
30–6–50ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்டுபோடவும்
(விளம்பரம்)

## கழக நடவடிக்கைகள்

காஞ்சி:— தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம் 11-6-50 அன்று மாலை, தோழர் வ. சிவகுருநாதன் அவர்கள் தலைமையில், நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 ஜூன் மாதம் 28-ந் தேதி பொதுக்கூட்டத்தை நடத்துவதாக கமிட்டியால் தீர்மானிக்கப்பட்டு, பொதுக்கூட்ட அமைப்பாளர்களாக தோழர்கள் சிவகுருநாதன், எஸ். கே. முத்துசாமி, ம. ராசமாணிக்கம், தி. சேகவன், வே. குருசேன் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2 செங்கற்பட்டு மாவட்டக் கழக தி. மு. க. கமிட்டி செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலையிடம், கழக நிதிக்காக ரூ. 5 கொடுக்கப்பட்டது. இத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

* * *

கோனார்த்தோப்பு:— தி. மு. க. செயற்குழுக்கூட்டம் 4-6-50 மாலை தோழர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தலைமையில் கூடியது. அதுபோது, விரைவில் கழகப் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், கூட்டத்திற்குத் தோழர் சி. வி. சித்ரசு அவர்களை அழைப்பதென்றும், தலைவராக தோழர் கே. எஸ். ஆர். அல்லாக்காரன் அவர்களை அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டு, தோழர் இராகுலன் அவர்கள் நன்றி கூற முடிவுற்றது.

* * *

சைதாப்பேட்டை:— இவ்வூர் தி. மு. க. கழகமானது, தங்கசாலை [illegible] செம்பர் 40, சுப்பரமணிய முதலி தெருவுக்கு மாற்றப்பட்டுள்ளதென்று, செயலாளர் தோழர் அண்ணாமலை அறிவிக்கிறார்.

* * *

சேலம், அம்மாப்பேட்டை:— தி. மு. கழக நகரக்கிளை கட்டிடத்தில் 11–6–50 இரவு, தோழர் எம். வி. வள்ளியப்பன் அவர்கள் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

1. சேலம் அம்மாப்பேட்டை, மெயின்ரோடு, தி.மு.கழக சொருள் உறுப்பினர் தோழர் கே. கௌண்டைய்யா அவர்களின் மூத்த புதல்வி எதிர்பாராதவிதமாக இறந்ததை எய்தியதை முன்னிட்டு, அன்னாரின் குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

* * *

வாலாஜா, அரக்கோணம்,— வ. ஆ. மாவட்ட கழகத்திலிருந்து [illegible] உறுப்பினர்கள் சேர்க்கும் புத்தகம் [illegible] வந்து இருக்கிறபடியால், ஆ[illegible] உள்ள தோழர்கள் மூலத்தி[illegible], உறுப்பினர்களைச்சேர்த்து, [illegible] முகங்கள் தோற்றுவிக்க[illegible] மென்றும், தோற்றுவிக்கும் [illegible] கீழ்காணும் முகவரிக்கு [illegible] த்தி உறுப்பினர் பெற்றுக்கொள்ளவும் [illegible] அமைப்பாளர் வேண்டுகிறார் [illegible], சோளிங்கர், வாலாஜா தாலுக்கா-அமைப்பாளர், தி.மு. க[illegible] ஆற்காடு N. A. Dt.

ஆசிரியருக்கு மடல்கள்:

### கார்ப்பரேஷன் கவனிக்குமா?

ஐயா!

சென்னை நகர ஓட்டல்களில் ரெண்டு வாரமாக டீ, காப்பி இன்னும் குடிக்கும் பானங்களில் (சாக்கரின்) என்ற பவுடர் சீனியை பெருமளவு டீ, காப்பிகளில் சீனிக்குப் பதிலாக பவுடர் சீனியை கலப்பதால் டீ பானங்களை அருந்தியவுடன் தொண்டை கரகரப்பு ஏற்படுகிறது. மேலும் மக்களுடைய உடம்புக்கும் கெடுதி உண்டாக்கக் கூடியதாயும் இருக்கிறது. ஆகையால் இதை நகர சபை அதிகாரிகள் கவனிக்கவேண்டும். சானிடேரி இன்ஸ்பெக்டர்கள் இருந்தும் இதை கவனித்ததாகத் தெரியவில்லை சீனி இல்லாவிட்டாலும் கருப்புக்கட்டியை உபயோகித்தாலும் பரவாயில்லை. ஆகையால் இதை சென்னை சுகாதார இலாகா கவனிக்குமா?

என். வி. அன்பில்அபூபக்கர்

• • •

### வருணாசிரமக் கொடுமை

ஐயா,

பிராமணர்களின் ஓட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு குலத்துக்கொரு நீதியும் மற்றொரு குலத்துக்கொரு நீதியும் என்ற ஜாதி ஆணவம் இன்னும் நிலைத்திருக்கிறது தமிழர்களுக்கும் நாயர்களுக்கும் 8 மணி நேர வேலை கொடுப்பது இல்லை. பிராமணர்களுக்கு மட்டுந்தான் கொடுக்கிறார்கள். வாரந்திர லீவு முறையும் தமிழர்களுக்கு கொடுப்பதில்லை. பிராமணர்களுக்கு மட்டுந்தான் கொடுக்கிறார்கள். சாப்பிடுவதிலும் பிராமணதொழிலாளிகள் வேண்டுமென்றாலும் எடுத்து சாப்பிடலாம், தமிழர்கள் தொட்டுக் கூடாது அவர்களை கேட்டு வாங்கி தான் சாப்பிட்ட மீதி மிச்சம் எச்சங்களை சாப்பிடவேண்டும். வேலை செய்வதிலும் சர்வர் பிராமணன் இலை வேலை தான் செய்யவேண்டும், தமிழன் இன்ன வேலைதான் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. கஷ்டமான வேலைகள் தமிழன் தான் செய்யவேண்டும். கஷ்டம் குறைந்த வேலைகள்தான் பிராமணர் செய்யவேண்டும். வாரவிடுமுறை கடை அடைத்து பிராமணதொழிலாளருக்கு லீவு கொடுக்கிறார்கள் தமிழர்கள் அன்று வேலை செய்ய மறுத்தால் வேலையைவிட்டு நீக்கிவிடுகிறார்கள். பிராமணன் முட்டாளாக இருந்தாலும் சப்ளை செய்வது, வெச்ச பதார்த்தத்தை தொட்டு எடுத்து கொடுப்பது போன்ற வேலைகள்தான் செய்ய சொல்வார்கள். தமிழன் படித்தவனாயிருந்தாலும் மற்ற கஷ்டமான வேலையும் எச்சிலெடுப்பது துடைப்பது போன்ற இழிவான வேலையும் தான் செய்ய சொல்வார்கள். சம்பளமும் பிராமண தொழிலாளர்களுக்கு 30 ரூபாய் முதல் 50 ரூ. வரை கொடுக்கிறார்கள், தமிழர்களுக்கு 8 ரூபாய் முதல் 12 ரூ. மேல் கொடுப்பதில்லை பிராமணர்கள் ஓட்டல்களில் சுகாதாரம் குறைவு. இந்தத் தொழிலில் இன்னும் எத்தனையோ தமிழர்கள் உழைத்து உழைத்து உருக்குலைகிறார்கள். இந்த நிலைமை மாறுவது எப்போது? இந்த நிலைத்த சம்பவத்தைக் கொண்டு தொழிலாளர் என்ன செய்வது. இதை அரசாங்கம் கவனிக்குமா?

திருச்சி ஓட்டல் தொழிலாளர்கள்

வ. ஆ. மாவட்ட
தி. மு. கழக முதல் மாநாடு
ஜூன் திங்கள் 24, 25 சனி ஞாயிறுகளில்
ஆரணிக் கோட்டையில் நடைபெறும்
தலைவர்:– க. அன்பழகன்
துவக்குபவர்:– எம். எஸ். இராமசாமி
பொதுச்செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்கள்
பலரும் கலந்துகொள்வர்
★
24–6–50
சென்னை முன்னேற்ற நாடகக் கழகத்தார் நடிக்கும்
"கல்சுமந்தகசடர்" "வழக்குவாபஸ்"
(சி. என். ஏ.)
ஆகிய ஓரங்க நாடகங்கள் நடைபெறும்
25–6–50 இரவு
கே. ஆர். இராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்
"சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்
மாநாட்டுக் கட்டணம்:—
வரவேற்பாளர் ரூ. 5–0–0 :: பார்வையாளர் ரூ. 1–0–0
நாடகங்களுக்குக் கட்டணம் கிடையாது
உணவுக்கு இரண்டு நாட்களுக்கும் ரூ. 2–0–0
வரவேற்புக்குழுவினர்

### தேசீய திட்டங்களுக்கு அணுசக்தி உதவி

ஸ்டாக்ஹோம், ஜூன் 18— சைபீரியாவை சுபிட்ச பிரதேசமாகச்செய்ய, அணுசக்தி மூலம் மலைகளை அழிப்பது, நதிகளை திருப்புவது முதலியவைகளைச் செய்யப்போவதாக ரஷ்யாவிலிருந்து வெளியான செய்தி வெறும் வாய்ப்பேச்சு என்றே தெரிகிறது. ஏனெனில், சைபீரிய திட்டம் பற்றி மாஸ்கோ ரேடியோ குறிப்பிடுகையில் இந்த அணுசக்தி, திட்டம் விஷயமாக எதுவுமே குறிப்பிடவில்லை.

### ஜப்பானில் கம்யூனிச எதிர்ப்பு வேலை

டோகியோ, ஜூன் 18— ஜப்பான் சட்டசபை, மேல் சபைகளில் ஜாப் பிரதமர் யோஷிடாவுக்கு இப்போது போதிய மெஜாரிட்டி கிடைத்துவிட்டதால் ஜப்பானில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆட்டம் கண்டுவிட்டது என்றே கூறலாமாம். பொதுச்சர்வீஸிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி மெம்பர்கள் எல்லோரையும் வெளியேற்றும் நடவடிக்கையை அவர் சீக்கிரமே எடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிர்ஷ்டமும் — சேமிப்பும்
மெம்பராக சேர்ந்துவிட்டீர்களா?
இல்லையேல் இன்றே சேருங்கள்
ரூபாய் 5 கட்டினால் அதிர்ஷ்டமிருந்தால் உங்களுக்கு ரூபாய் 250 பிரைஸ் கிடைக்கும்.
பிரைஸ் கிடைக்காவிட்டால்? செலுத்திய பணம் வட்டியுடன் கிடைக்கும்.
பிரைஸ் எடுக்கும் தேதி 20—7—50
10-7-50க்குள் ரூபாயும், விண்ணப்ப பாரமும் ஆபீசுக்கு வந்துசேர வேண்டும். விவரங்கட்கு 2 அணா தபால்ஸ்டாம்பு வைத்து எழுதவும்
"கோயமுத்தூர் டிரஸ்ட் லிமிடெட்"
(விளம்பரம்) ரங்கநாதபுரம் — கோயமுத்தூர்.

### குட்டி அணுக்குண்டு?

நியூயார்க், ஜூன் 18— 'பேபி' அணுகுண்டுகண்டு பிடிக்கப்பட்ட செய்தி யுத்தம் முடிந்ததிலிருந்து வெளியான மகத்தான ராணுவ செய்தியாகும் என்று 'கிருஸ்டியன் ஸயன்ஸ் மானிடர்' எழுதுகிறது. இது உருவத்தில் சிறிய ஒழியே மிக சக்தி வாய்ந்ததென்றும், விமானங்களில் இலகுவாக எடுத்துச்சென்று, குறித்த இடத்தில் பிரயோகிக்கக்கூடியதென்றும், இது கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால், மேற்கு நாடுகள் இனி பாதுகாப்பை பற்றிப் பயப்படவேண்டிய அவசியமே இல்லையென்றும் அப்பத்திரிகை எழுதுகிறது.

### மத்திய கிழக்கு கூட்டு பாதுகாப்புத் திட்டம்

கெய்ரோ, ஜூன் 18— அலெக்ஸாண்டிரியாவில் கூடிய அரசியல் கமிட்டியில், மத்திய கிழக்கு கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டபோது, கையெழுத்துபோடுவது ஒத்திவைக்கப்படலாம் என்று, சில பிரதிநிதிகள் யோசனை கூறியதாகத் தெரிகிறது.

### இந்தியாவில் பெட்ரோல் இறக்குமதி

புதுடில்லி, ஜூன் 19— இந்தியா 1949-ம் வருடத்தில், 231 100,000 காலன் பெட்ரோலை இதர நாடுகளிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.